# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௪ | மலர் |
| --- | --- | --- |
| ௩௯ | சோபகிருது, ஐப்பசி. | எ. |
| | 1963 செப்டம்பர், அக்டோபர். | |

## கலையின் கடமை

புலவர். தி. நா. அறிவு ஒளி

அறிவுநிலை இன்பத்தை அமைக்க உதவும் ஒருதுணை. அது வாழ்வின் ஒவ்வொரு அணுக் கூறிலும் இயல்பாய் அமைந்து இயங்குகிறது. அறிவு. 'உணர்வின்' தெளிவுநிலை. எனவே உணர்வுப் பண்பாடு 'அறிவுச் செழுமைக்கு' இன்றி யமையாதது. இந்த வளமார் நாகரிகத்தை வளர்த் தோம்புவது கலை—இலக்கியப்—படைப்புக்களே. சீரிய இலக்கியங்கள் தனி நாட்டிற்கும், தனியொரு மொழிக்கும் சிறப்பளிப்பதாக இருப்பினும், பொதுமை உணர்வாலும், மேதைமைச் சிறப்பாலும், மொழியாற்றலாலும், கருத்து வளத்தாலும், புது எண்ண—உணர்ச்சி நலனாலும் ஞாலப் பேரிலக்கியமாகி, மற்ற நாடுகட்கும், பிற மொழிகட்கும் வளமையையும் புலமையையும் அளிக்கிறது.

இந்த நிலையால் சில மக்கள் பெற்ற நலமும், பயனும், இன்பமும்; உலக மக்கள் யாவருக்கும் அமைகின்றன. எனவே, கலை—இலக்கியப்பணி, அறிவுக்கும் உணர்ச்சிக்கும் ஒருங்கே விருந்தளிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

வாழ்க்கையின் குறிக்கோள்கள், நோக்கங்கள், கொள் கைகள் ஆகியவை செயலோடு முரண்படக் காண்கிறோம். செயலுக்கும் கொள்கைக்கும் (எண்ணத்துக்கும்) வேற்றுமை யிருப்பதால் உலகியலில் போராட்டம் அமைகிறது. உயிர்கள் வாழும் முயற்சியில் இடையருது தலைப்பட்டிருப்பதால் வாழ்வின் தொடர்ச்சி வளர்கிறது.

வாழும் முயற்சியில் அமையும் இடர்ப்பாட்டுக்கு அஞ்சியும், அதைக் கடக்கச் சூழ்ச்சி செய்தும், மக்கள் செய லளவில் எண்ணம், கொள்கைகளுக்கு மாறுபட்டு இயங்கு கின்றனர். இந்நிலை ஒருவகையில் 'பண்படாத' அறிவால் அமைவதே என்பதையும் ஒப்பவே வேண்டும்.

கற்ற அறிஞர்களில் சிலரும் இவ்வாறு முரண்பட வாழ்வதை நோக்கும் போதுதான் இத்தகு 'முரண்' நமக்கு ஐயத்தை உண்டாக்குகிறது. அத்தகு அறிஞர்கள் சொல் வேறு செயல் வேறுபட்டு நடப்பதற்குக் காரணம் வாழ்வுப் போரில் குறுக்கு வழியில் பெரிய வெற்றியை அடைவதற்கே என்பதை உணர நேருகிறது. ஆனல், இப்போலி வெற்றி பொய்த்துவிடக் கூடியது என மக்கள் தெள்ளத் தெளிய அறிய வேண்டும்.

வாழ்க்கையின் சிக்கலுக்கு விடைகாண முற்படும்போது, தம் கொள்கையைச் சிதைத்துக் கொண்டு நடைமுறையில் முரண்பட்டுச் சிலர் வாழக் காண்கிறோம். இவர்கள் மன்பதையின் கழிவிரக்கத்திற் குரியோராவர்.

இதனை மாற்ற—திருத்த—வழிஎன்ன ?

"எண்ணுவது நல்லதாக—உயர்ந்ததாக—உண்மையானதாக—நேரிதாக எண்ணவும், எண்ணித் துணிந்த வண்ணமே பேசிச் செயலாற்றவும் மக்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். இப்பயிற்சியையே கலையுலகினரும், இலக்கிய எழுத்தாளர்களும், புலவர்களும் செய்ய வேண்டும். இதுவே அவர்களின் முதற் கடமையாம்.

நல்லவர்கள் உண்மையாகக் கடமை, தொண்டு செய்ய முற்பட்டால் மற்றவர்கள் அவர்களை எள்ளி நகையாடிப் பழித்துச் சிரிக்கிறார்கள். தாழ்வாகப் பேசுகிறார்கள். 'இப்படி நாயாய் அலைகிறானே! என்ன பயன்? செத்துப் போனல் தலையிலா சுமந்து செல்வான்?" எனத் துறவியர் போல எள்ளுவர். இத்தகையோர் பணி செய்வோரைப் பழிப்பதன்றித், தாங்களாக எந்த ஒரு சிறு ஆக்கமும் செய்தற்கு அறியாத சிறுமை யுடையோரேயாவர்.

இவர்கள் குரலுக்குச் செவி கொடுத்தல் நேர்மையாளர் செயலன்று. 'செயல்—பணி—செய்வது பிறவி நோக்கம்' என்ற உண்மை தெளிந்து ஒழுகுவதே ஆன்றோர்க்குக் கடமை. தூற்றுபவர்க்காகச் சோர்ந்து பின்வாங்குதல் தக்கதன்று. இக்கருத்தைத் தெளிந்தே புத்திலக்கியப் படைப்பாளர்கள் இன்றைய உலகக் குறைகளை உணர்த்திச் சீர் திருத்தம் செய்தல் வேண்டும்.

மற்றவர்களினின்றும் மாறுபட்டுப் புதுமை பூண்பது அறிவுடைமை. மற்றவர்க்கு ஏற்ப இசைந்தொழுகித் தொண்டாற்றுவது இனிய பண்புடைமை. இவ்விரு வேறு நிலைகளையும் தெளிந்து நல்லோர் வாழ்ந்து, வழிகாட்டி உலகை நல்லாற்றில் செலுத்த வேண்டும்.

கல்வித் தவம் செய்வோர், கலைவழிபாட்டில் ஈடுபடுவோர் உலகை உண்மையாக வழிபட்டுயரும் நற்பேறு பெற்றவராம். அத்தகையோர் ஆற்றல் 'ஆக்கத்துறைகளில்' மட்டும் ஈடுபடுமானல் நாடு நனிசிறக்கும்.

# திருக்குறளில் திருத்தமா?

(வித்துவான், ச. கிருட்டிணராசன், புதுவை.)

தமிழர் பெற்றுள்ள தனிப்பெருஞ் செல்வம் திருக்குறள். இஃது காலங்கடந்து நிற்குங் கருத்துக்களைக் கொண்டது. எச்சமயத்தினரும் எம்மொழியினரும் ஏற்றுப் போற்றும் மாண்புடையது. தமிழையும் தமிழரையும் தமிழகத்தையும் உலகினர் கருத்தில் ஊன்றச் செய்வது. உயர்ந்த சிந்தனையின் பிழிவு திருக்குறளாக உருக்கொண்டது என்று கூறின் மிகை யாகாது. ஒப்புயர் வற்ற இந்நூலுக்கு உரை கண்டோர் பலர். வள்ளுவர் உள்ளக் கருத்திற்கொப்ப அமைந்தது தெள்ளு பரிமேலழகர் செய்த உரை என்பது சான்றோர் கருத்து.

சொற்செட்டும், பொருளாழமும் கொண்ட சுவை சொட்டும் நடையிலமைந்த இவ்வுரையைப் போற்றாத புலவர் இலர். இதற்கு முன்னும் பின்னும் எழுந்த பல உரைகள் காலப் போக்கில் காற்பாரற்று மறைந்தொழிந்தன. இதற்குக் காரணம் அவற்றின் சிறப்பின்மையே என்க.

இக்காலத்தும் முப்பாலுக்குப் பல விளக்கங்களும் உரைகளும் தோன்றியுள்ளன. இவற்றின் ஆசிரியர்களில் பலர் பரிமேலழகர் கருத்துக்கு மாறுபட்ட விளக்கங்களைப் பல குறட்பாக்களுக்குத் தந்துள்ளனர். அவை நிலைத்து நிற்கும் நீர்மையானவா என்பதைப் பொறுத்திருந்தே காண்டல் வேண்டும். நிற்க சிலர் பரிமேலழகருரையில் குறை கண்டதோடமையாமல் குறட்பாக்களிலும் குறை கண்டுள்ளனர்.

குறையை வள்ளுவர்மீது ஏற்ருமல் ஆதரிப்பாரற்ற ஏடெழுதுவோர் மீதும், கறையான்கள் மீதும் ஏற்றித் தம் கூற்றுக்கு ஆதரவு தேடுகின்றனர். இக்குறளில் இச்சொல் இப்படி இருந்திருத்தல் வேண்டும், ஏடெழுதியவன் அவசர புத்தியால் தவறு செய்து விட்டான் என்றுரைத்துத் தம் புத்துரையை விரித்துரைக்கின்றனர். இவர்கள் தம் கருத்தைக் குறளில் திணிப்பதற்கே இவ்வாறு செய்கின்றனர் என்பது வெள்ளிடைமலை. இனி ஓர் அறிஞர் திருத்தி எழுதிய குறளையும் அதற்கு அவர் அளித்த விளக்கத்தினையும் காண்போம்.

"செம்றகரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

நீத்தார் பெருமை என்ற அதிகாரத்துள் ஆருவது குறட்பா வாக இஃது அமைந்துள்ளது.

இதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள் :—

ஒத்த பிறப்பினராகிய மக்களுள் செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர். அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர் என்பதாம். இவ்வுரையிலும் இவ்வுரைக் கிடந்தந்த குறளிலும் தம் கருத்துக்கிடமில்லை என்று கண்ட அவ்வறிஞர் பாவின் இரண்டாமடியில் செயற்கரிய என்றிருப்பதைச் செயற்குரிய என்று மாற்றிப் பின்கண்ட பொருளை வரைந்துள்ளார்.

"பெரியவர்கள் பிறரால் செய்தற்கு முடியாத அரும் பெருங்காரியங்களைச் செய்வார்கள். ஆனல் சிறியவர்களோ எளிதில் செய்யக் கூடிய சிறிய காரியங்களைக் கூட செய்ய மாட்டார்கள் என்பதாகும்.

இவ்வுரையை ஆராயுமுன் குறளை மாற்றியதற்கு இவர் கூறும் காரணங்களை ஆராய்வோம்.

"செய்தற்கு அருமையான காரியங்களைச் செய்பவர்களே பெரியவர்கள்" என்று கூறிவிட்டபொழுதே "சிறியவர்கள் அவ்வாறு செய்ய முடியாதவர்கள் என்று தோன்றுகிறது. மறுபடியும் "சிறியவர் செயற்கரிய செய்யார்" என்று கூறியிருக்க வேண்டியதில்லை அல்லவா? இது அறிஞர் கூறும் முதற் காரணம்.

ஒன்றைக்கூறி அதனேடியையுடைய மற்றென்றை உய்த்துணர வைப்பது நூலாசிரியர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தொன்றன்று.

தொல்காப்பியத்தில் :—

" உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்பனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே"

என்ற சொல்லதிகாரத் தலைச் சூத்திர உரையில்; "இனி அவரல என்னது பிற என்றேவிடின் யாதல்லாத பிற என்று அவாய் நிற்குமாகலின் (அவரல) என்றார். மக்கட் சுட்டே என்று மேல் நின்றமையின் மக்களல்லாத பிற என்று உணரலாம் எனின், ஆற்றல் முதலாயினவற்றாற் கொள்வது சொல் இவ்வழி என மறுக்க" என்று சேனவரையர் கூறியிருத்தலை நோக்குக.

"புத்துரைகண்ட அறிஞர் மேலும் கூறுவதாவது : வள்ளுவர் அதனை மறுபடியும் வற்புறுத்திக் கூறவே அவ்வாறு கூறியுள்ளார் என்று கருதுவதும், கூறுவதும் வள்ளுவருக்குப் பெருமையளிப்பதாக இல்லை" இக்கூற்றும் மறுத்தற்குரியதே.

உலகினருக்கு அறங்கூறவந்த தெய்வப் புலவர் தாம் கூற வந்த எப்பொருளையும் மயக்கத்திற்கு இடந்தராமல் தெளிவாகக் கூறியுள்ளார் என்பதைக் குறளறிந்தார் அனைவரும் நன்கறிவர். இதனாலேயே "சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்று கூறியுள்ளார். இம்முறையைக் குறளில் பலவிடங்களில் கையாண்டுள்ளார்; சான்றாகப் பின்வரும் இரு குறட்பாக்களைக் காண்க.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

இவ்வாறு பாக்களை யமைத்திருப்பதால் வள்ளுவர் தம் பெருமையை இழந்துவிட்டார் என்று கூற முடியுமா ?

ஏடு எடுத்து எழுதியவர்களின் அவசர புத்தியும் கறையான்களின் வயிற்றுப் பசியும் ஒன்றாய்க் கலந்து தமிழ்ச் சுவடிகளில் பல பிழைகளை உண்டாக்கியிருக்கின்றன. அவற்றுள் ஒன்றே இதுவும்.

இது அறிஞர் கருத்தில் உதித்த மூன்றாவது காரணம். இவர் குறிக்கும் பிழை உரையாசிரியர்களின் கைக்குத் திருக்குறள் ஏடுகள் கிடைப்பதற்குமுன் ஏற்பட்டிருக்க வேண்டும். இத்தகைய பிழையற்ற சுவடி ஒன்றைத் தவிர வேறு சுவடிகளில் உரையாசிரியர்களின் கண்பதியா திருந்திருக்க வேண்டும். பொருட் சிறப்பில்லா "செயற்கரிய" என்ற சொற்றொடரில் ஐயங்கொண்டு பாட பேதத்தைக் குறித்திருத்தல் வேண்டும். அவ்வாறு குறிக்கப் பெறாததால் இதுவே மூலபாடம் என்று கொள்ளுதலே பொருந்தும்.

இனி புத்துரையின் சிறப்பின்மையை ஆராய்வோம். பெரியவர்கள் பிறரால் செய்தற்கு முடியாத அரும்பெரும் காரியங்களைச் செய்வார்கள். ஆனால், சிறியவர்களோ எளிதில் செய்யக் கூடிய சிறிய காரியங்களைக்கூட செய்ய மாட்டார்கள்.

இப்புத்துரையைக் கருத்திற் கொண்டால் எளிதில் செய்யக்கூடிய சிறிய காரியங்களைச் செய்பவர்கள் எத்தகையராவர் ? பெரியவராவரா ? சிறியவராவரா ?

குறளில் புதைந்து கிடக்கும் பொருளை எடுத்துக் காட்ட விழைந்தவர் செயற்கரிய என்ற சொல்லுக்கும் செயற்குரிய என்ற சொல்லுக்கும் விளங்குகின்ற முறையில் ஓரிரு எடுத்துக் காட்டுக்களைக்கூட கூறவில்லை.

அவை பற்றிப் பரிமேலழகர் கூறுவதாவது. செயற்கு எளியவாவன—மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழி

களாற் புலன்களில் செலுத்தலும், வெஃகலும், வெகுளலும். செயற்கு அரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புக்கள்.

இக்கருத்தை நோக்குமுன் வேறொன்றை நாம் நினைவு படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இங்கு ஆராய எடுத்துக் கொண்ட குறள் அறத்துப்பாலில் மூன்றாவது அதிகாரமாகிய நீத்தார் பெருமை என்ற அதிகாரத்துள் அமைந்துள்ளது.

நீத்தாருள் அதாவது துறந்தாருள் இவர் பெரியர் இவர் சிறியர் என்று விளக்குதலே இக்குறட்பாவின் நோக்கம். எனவேதான் துறந்தார் இன்றியமையாது மேற்கோடற்குரிய இயமம், நியமம், ஆசனம், பிராணயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எண்வகை யோக உறுப் புக்களையும் பரிமேலழகர் எடுத்துக் கூறியுள்ளார். இவற்றை மேற்கொள்ளாதோர் துறந்தோராயினும் உலகத்தோரால் இழித்துரைக்கப்படுவர். பிறரால் பழித்துரைக்கப்படாததே சிறந்த துறவறம் என்பது வள்ளுவர் கருத்து. இதனை

"அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

என்பதனால் அறியலாம்.

இக்கருத்துக்கு மணக்குடவர் உரையும் அரண் செய் தலைக் காண்க :—

மணக்குடவர் :— செயற்கரியன செய்வாரைப் பெரி யோர் என்று சொல்லுவர்; அவற்றைச் செய்ய மாட்டா தாரைத் துறந்தாராயினும் சிறியோரென்று சொல்லுவர் என்றவாறு செயற்கரியன—இயமம், நியமம் முதலாயின.

இவ்வதிகாரம் நீத்தார் பெருமை என்று கூறப்பட்ட தாயினும் துறந்த மாத்திரத்தானே பெரியர் என்று கொள்ளப் படுபவரென்று இது கூறிற்று.

நிற்க இக்குறள் துறந்தார் ஒழிந்த ஏனையோர்க்கும் பொருந்து மாறமைந்துள்ளதை இனிக் காண்போம்.

எவர்க்கும் செயற் கெளியவாவன : மனம் வேண்டிய வாறே அதனைப் பொறி வழிகளாற் புலன்களிற் செலுத்தலும் வெஃகலும், வெகுளலும் முதலாயின.

இவற்றிற்கு மறுதலையான—மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்தாமையும், வெஃகாமையும், வெகுளாமையும் செயற்கரிய செயல்களாகக் கொள்ளலாம்.

மதயானையைத் தன் வயப்படுத்தல், புலி, சிங்கம் போன்ற காட்டு விலங்குகளை அடக்குதல், பாம்பெடுத் தாட்டல், பிறரறியாமல் உலகத்துலாவல், நீர்மேல் நடத்தல்

## "தமிழ் இலக்கியத்தில் நாடகத்தின் நிலை"

தெ. செந்தில் நாதன், M. A.,
முதல் ஆண்டு (ஆங்கில இலக்கியம்)
மாநிலக்கல்லூரி சென்னை — 5.

நாடகத்தைப் பற்றி எண்ணுகின்ற எந்தத் தமிழ் நெஞ்சமும் வேதனைப் படாதிருக்க இயலாது. இருபதாம் நூற்றுண்டின் இடைப் பகுதியைக் கடக்கின்ற இந்நாளிலும் சிறுகதை அடைந்திருக்கும் வளர்ச்சியையோ அல்லது புதினங்கள் அடைந்திருக்கும் வளர்ச்சியையோ, நாடகம் பெறவில்லை என்பதை வேதனையுடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இலக்கியத்தில் ஒரு துறையான நாடகம் உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் செழிக்கவில்லை என்பது நமக்கெல்லாம் பெருமை தருவதன்று. எந்த ஒரு கருத்தையும் விரைவில் பரப்புவதற்கும், கற்றவர்களும் மற்றவர்களும் எளிதில் புரிந்து கொள்வதற்கும் பயன்படும் ஒரு சிறந்த கருவியான நாடகம் தமிழில் சிறப்படையவில்லை எனில் இலக்கிய உலகில் தமிழுக்கிருக்கும் பெருமை ஓரளவு குன்றக் கூடும். சென்னைப் பல்கலைக்கழகம் கல்லூரி மாணவர்களுக்கு,

---

விண்ணவரை ஏவல் கொள்ளுதல் முதலிய செயல்களைத் தையும் மனிதன் எளிதில் செய்யக்கூடும். ஆனால் சிந்தையை யடக்குதல் அரிது என்று தாயுமான அடிகள்

"கந்துக மதக் கரியை......"

என்று தொடங்கும் திருப்பாடலில் கூறியுள்ளதைக் காண்க.

நிற்க, செயற்குரிய செயல்களுக்கும், செயற்கரிய செயல்களுக்கும் உள்ள தொடர்பைக் காண்போம். செயற்கரிய செயல் எதுவாயிருப்பினும் அது செயற்குரிய செயலாக இருந்தால்தான் அதனைச் செய்வோர் பெரியவராவர். இன்றேல் சிறியவராவர். செயற்குரிய வல்லாச் செயல்களும் உள. அவற்றுள் பல செயற்கரியனவாய் அமைந்துள்ளன. உரியவர் அறியாமல் உடைமையைக் கைக் கொள்ளுதல் அரசினர் அறியாமல் அரும் பொருளைப் பதுக்குதல் பெருங் குற்றம் புரிந்து பிறரறியாமல் வாழ்தல் முதலியன அருஞ் செயல்களே. இவற்றைச் செய்வோர் பெரியவராவரோ. இதுவரை கூறியவாற்றுன் "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்—செயற்கரிய செய்கலாதார்" என்ற அருங் குறட்பாவில் திருத்தத்திற்கிடமில்லை என்பதும் பரிமேலழகர் உரையே சாலப் பொருந்தும் என்பதும் நன்கு புலனும்.

"மனோன்மணீயம்" "சாகுந்தலம்" இவையிரண்டையே தொடர்ந்துவைப்பதை நோக்குகின்ற பொழுது, "தரம்" உள்ள தமிழ் நாடகம் இரண்டுதானா? என்று எண்ணி நெஞ்சம் புண்ணாக வேண்டியிருக்கின்றது.

எனினும், இருபதாம் நூற்றாண்டில் நாடகம் வளராமல் இல்லை. பழந்தமிழ் நாடகங்கள் கிடைக்காது போனதற்குப் பின்னர், அக்குறையை நிறைவாக்கச் சுந்தரம்பிள்ளை "மனோன் மணியத்தைத் தமிழுலகுக்கு அளித்தார். அதற்குப்பின்னர் நாடக ஆசிரியர்கள் பலர் தோன்றினர்; நாடகங்கள் பல உருவாயின. பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், பரிதிமாற் கலைஞர், புதுமைப்பித்தன், அண்ணாத் துரை, டாக்டர் மு. வ., அரு. இராமநாதன், பி. எஸ். ராமையா, வ. சுப. மாணிக்கம், மறைமலை அடிகள் போன்ற பல எழுத்தாளர்கள் நாடகங்கள் எழுதினர்; பலர் எழுதிய வண்ணம் உள்ளனர்.

நாடகக் குழுக்கள் பல தோன்றி தமிழக மெங்கும் நாடகங்கள் நடத்தி வருகின்றன. வானொலியின் தோற்றத் தினால் வானொலி நாடகங்கள் பல வளர்ந்துள்ளன. இவ்வாறு, தமிழ் நாடகம் பலதுறைகளிலும் பெருகியிருந்த போதிலும், நல்ல வளர்ச்சி பெற்றிருப்பதாகச் சொல்ல முடியுமா? இலக்கியம் என்ற நிலையைத் தொடக் கூடிய நாடகங்களை விரல்விட்டு எண்ணிவிடலாமே! உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பாராட்டக் கூடியச் சிறுகதைகள் தமிழில் பல உண்டு; புதினங்கள் பல உண்டு. ஆனால் நாடகங்கள் எத்தனை இருக்கின்றன?

தமிழ் இலக்கியத்தில் ஸ்காட்டுகள் (Walter Scott) உண்டு; டிக்கன்ஸ்கள் (Charles Dickens) உண்டு. ஆனால் சேக்ஸ்பியர்கள் (Shakespeare) இல்லை; பெர்னாட்ஷாக்கள் (Bernard Shaw) இல்லை. இந்தக் கசப்பான உண்மையை நாம் விழுங்கத்தான் வேண்டும். அப்பொழுதுதான் நாட கத்தின் நலிவு நீங்கும்.

மேடைகளில் நாடகங்கள் பல வெற்றி பெற்றன. அதே நாடகங்கள் நூல் வடிவைப் பெற்ற போழுது மன நிறைவை அளிக்கவில்லை. மேடைகளில் நாடகங்களைப் பார்க்கின்ற பொழுது அதன் காட்சிகளாலும், நல்ல நடிப்பாலும் (ஆசிய—ஆப்ரிக்க நாடுகளில் சிறந்த நடிகன் என்று தேர்ந்தெடுக்கப் படுமளவுக்கு ஓரிரு நடிகர்கள் இருப்பதை எண்ணி நாம் மகிழலாம்.) உவகை கொள்ளும் உள்ளங்கள், நூல்வடிவில் அதைப் படிக்கின்றபொழுது நிறைவைப் பெறுவதில்லை. இதற்கு, "மனிதன்" போன்ற நாடகங்கள் தக்க சான்றுகளாகும்.

படிப்பதற் கென்றே பல நாடகங்கள் எழுதப்பட்டன. டாக்டர் மு. வ. வள்ளல் பச்சையப்பரின் வாழ்க்கையை நாடக மாக்கினார். அதை ஒரு நல்ல நாடகம் என்று கூற முடியுமா? இதையே அவர் ஒரு வாழ்க்கை வரலாறாக எழுதி யிருப்பாரேயாயின் தன் முயற்சியில் மு. வ. வெற்றி பெற்றிருப்பார்.

முப்பாலுள் ஒன்றான இன்பத்துப்பாலை மயிலை கோவிந்த ராசனார் நாடக மாக்கினார். அவரது இலக்கியப்பணி பாராட்டுக்குரியதுதான். அதை நாடகம் என்ற அளவில் எந்த அளவுக்குப் பாராட்ட முடியும்?

இவ்வாறு, தமிழ் நாடகங்களைக் கூர்ந்து நோக்கினால் மிகச் சில நாடகங்களே பாராட்டுக் குரியனவாக இருக்கின் றன. விரல் விட்டு எண்ணக்கூடிய நாடகங்களே இலக்கியம் என்ற தகுதியைப் பெறுவனவாக இருக்கின்றன. எனவே, தமிழ் நாடகம் செழிப்பதற்குரிய ஆக்கப் பணிகளில் நாம் ஈடு பட வேண்டும்.

நாடகம் வளராமைகுத் திரைப்படத்தின் வளர்ச்சிதான் முக்கியக் காரணம் என்பதை ஓரளவுக்குத்தான் ஏற்றுக் கொள்ள முடியும்; அதுவும் மேடை நாடகங்களைப் பொறுத்த அளவில்தான்.

பண்டைத் தமிழகத்தில் நாடகங்கள் பெரும்பாலும் நடிப் பதற்கென்றே எழுதப்பட்டன என்று சொல்ல வேண்டும். அவைகளை மக்கள் பார்க்க விரும்பினார்களே யன்றிப் படிக்க விரும்பவில்லை. இது நாடகம் வளராமைக்குரிய காரணங் களுள் ஒன்றாகும். இதே நிலை இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்வது நல்லதல்ல. படிப்பதற்கென்றே நாடகங்கள் எழுதப் பலர் முன்வர வேண்டும். அவ்வாறு எழுதப்படும் நாடகங்களும், இனிமையான, எளிமையான ஆனால் நல்ல தமிழில் அமைய வேண்டும்.

நாளேடுகளும், திங்கள் ஏடுகளும் புதினங்களுக்கும். சிறு கதைகளுக்கும் அளிக்கும் சிறப்பான இடத்தை நாடகங்களுக் கும் அளிக்க முன் வரவேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகமும் நாடகங்களைத் துணைப் பாடங்களாகவாவது வைத்து ஆதரவு தரவேண்டும்.

கல்லூரி விழாக்களிலும், பள்ளி விழாக்களிலும், "எதை யாவது" எழுதி நாடகமாக நடிப்பதைவிட்டு, தமிழில் இருக்கும் நல்ல நாடகங்களை நடத்த முன்வர வேண்டும்.

நாடகப் போட்டிகள் பல நடத்தப்பட்டுத் தனிப் பரிசுகள் தர பத்திரிகைகளும் தமிழ் வளர்ச்சி மன்றங்களும் முன்வர வேண்டும்.

மேலும், தமிழ் நாடகங்கள் பற்றித் திறனாய்வு நூல்கள் பல வெளிவர வேண்டும். நாடகங்களில் காணப்படும் சிறப்பினையும் சிறப்பின்மையினையும் தெளிவாக எடுத்துக் காட்டும் திறனாய்வு நூல்களே தமிழ் நாடகங்களுக்குப் பெரும் தொண்டாற்ற முடியும். இன்றைய நாடகங்களில் காணப்படும் குறைகளையும் நிறைவுகளையும் எடுத்துக் காட்டினால்தான் வருங்கால நாடக ஆசிரியர்கள் குறைகளைக் களைய முற்படுவர்.

நாடகத் தந்தை, பம்மல், சம்பந்த முதலியார் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். அத்தனை நாடகங்களும் "இலக்கியம்" என்ற தகுதியினை உடையனவா? அடுத்தடுத்து வருகின்ற நூற்றாண்டுகளுக்கு அந்த நாடகங்கள் அழியாது நிற்க முடியுமா? "இருபதாம் நூற்றாண்டின் சிறந்த நாடகங்கள்" என்று அடுத்து வருகின்ற நூற்றாண்டின் மக்களுக்கு நாம் சில நாடகங்களைத் தர வேண்டாமா?

இவைகளையெல்லாம் எண்ணத்தில் கொண்டு நாடகத் திறனாய்வு நூல்கள் எழுதப்பட வேண்டும். அப்பொழுது தான் சிறந்த நாடகங்களை மக்கள் "அடையாளம்" கண்டு கொண்டு ஆதரிக்கத் தொடங்குவர் திறனாய்வு நூல்களாலே நாடகங்களை வளர்க்கவும் அழியாது காக்கவும் முடியும் என்று உறுதியாக நம்பலாம்.

எனவே, இன்றைய தமிழ் நாடகங்களின் நிலையினை நெஞ்சத்தில் நிறுத்தி, நாடகம் செழிப்பதற்குரிய ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு, இலக்கியத்தில் பல துறைகள் பெருகி வளரும் இந்நாளில்தான் நாடகமும் செழிக்க முடியும்.

# சாரியை "அத்து"

வித்வான், மோ. இசரயேல், எம். ஏ.
தமிழ் ஆய்வுத் துறை சென்னைப் பல்கலைக் கழகம்.

சாரியை என்பது இலக்கண நூலார் வழங்கிய குறியீடு களில் (terms) ஒன்று. சார்ந்து வருவன சாரியை ஆம். சாரியைகள் எவை எனவும், அவை வழங்கும் இடங்கள் எவை எனவும் தொல்காப்பியனாரும், பவணந்தியாரும் கூறிப் போந்த னர். அவர்கள் கூறாது விடுத்தவற்றை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டி உள்ளனர்.

இச்சாரியைகளை ஆராயின், அவை பெரும்பாலும் பொருள் அற்ற தனி எழுத்துக்கள் அல்லது எழுத்துக்களின் தொடர்ச்சி (phonemes or sequences of phonemes) என்பது தெளிவு. அவை சார்ந்து நின்று உருபன்களின் (morphemes)[1] அல்லது சொற்களின் புணர்ச்சிக்குப் பயன்படுகின்றன. மொழியியல் அறிஞர் (linguists) கருத்துப்படி அவை வெற்று ருபுகளே (emptymorphs) ஆகும். யாதொரு உருபனுக்கும் (morpheme) உரியதாகாமல், பொருளும் அற்றதாய்' பிற உருபன்களாலே அறிந்து கொள்ளும் தன்மை பெற்றவை தான் வெற்றுருபுகள் (empty morphs) என மொழியியல் அறிஞர் ஒருவர்[2] கூறி உள்ளார். தமிழ் மொழியில் வழங்கும் சாரியைகள் யாதொரு பொருளுள்ள உருமனையும் சேராதவை (assignable to no morphence); பொருளற்றவை; இலக்கண ஆசிரியர்கள் அவற்றிற்கு வடிவம் (form) கொடுத்துக்கூறி இருப் பினும், அவை பிற உருபன்களோடும் சொற்களோடும் பயிலுங் கால் அவை அடையும் மாற்றங்களையும் கூறியிருப்பதிலிருந்து, அவற்றின் வடிவத்தைப் பிற உருபன்களாலே அறிதல் இயலும் (predictable interms of non-empty morphs) என்பது தெளிவு.

தமிழ் மொழியில் வழங்கும் வெற்றுருபுகளில் 'அத்து'ம் ஒன்று. இது உருபு புணர்ச்சியிலும் (inflexion) பதப் புணர்ச்சி யிலும் (compounds) வழங்குகின்றது. இச்சாரியை வழங்கும் இடங்களை ஆசிரியர் தொல்காப்பியனார் தெளிவு படுத்தி உள்ளார்.

**உருபு புணர்ச்சி:** அகர. ஆகார ஈற்றுச் சொற்களின் முன் ஏழாம் வேற்றுமை உருபு'கண்' வரும்போது (தொல்.

---

1. Morphemes are the minimal meaningful units which may constitute words or parts of words. (Morphology—Nida page 1. 1957)

2. An empty morpheme assigned to no morpheme must have no meaning, and must be predictable in terms of non-empty morphs.
(Language Vol. 23/1957 page 242 C. P. Hockett)

எழு. 181) வரும் மகர இறுதிப் பெயர் முன் (தொல், எழு. 185) —அத்து வருதல் இன்றியமையாததாகும் [obligatory)

எ-டு விளவத்துக்கண் < விள + அத்து + கண்
மரத்தை < மரம் + அத்து + ஐ

தற்காலத்தில் அ, ஆ என்னும் ஈற்றுப் பெயர் முன்-இன்-வருதல் பெரும்பான்மையாகும். எ-டு பலாவின் கண். அகர ஈற்றின் முன்–அத்து-வரின் அதன் அகரம் கெடும் என இலக்கண நூலார் கூறி உள்ளனர். அத்தின் அகரம் அகர முனை இல்லை (தொல். எழு. 125, நன். 252).

1. மரம் + அத்து + ஐ > மரத்தை
மர + (அ)த்து + ஐ (இலக்கணம்)

2. மர + த் + ஐ > மரத்தை
மர + (த்) + த் + ஐ > மரத்தை (மொழியியல்)

தொல்காப்பியனுர் அழன்—, புழன்-என்னும் சொற்கள் உருபேற்கும் போதும்-அத்து-இடைவரும் (தொல். எழு. 193) எனக் கூறி உள்ளார்.

1. அழன் + அத்து + ஐ > அழத்தை
அழ + த் து + ஐ > அழத்தை

2. அழ + (த்) + த் + ஐ > அழத்தை
அழ + த் + ஐ > அழத்தை.

**பதம்புணர்ச்சி**: தொல்காப்பியனுர் பனி, வளி, மழை, விண், வெயில், இருள் ஆகிய சொற்களுடன் இணைந்து–அத்து– வரும் எனக் கூறி உள்ளனர். (தொல். எழு. 241, 242, 287, 305, 377, 402) இச் சொற்களின் பின்னர் வருங்கால் –அத்து– முழு உருவுடன் விளங்குகின்றது. பனியத்துக் கொண்டான், மழையத்துச் சென்ருன் என்பன போன்று வழங்கின. இத் தகைய வழக்குகளை நன்னூலார் குறிப்பிட்டிலர். இன்று தமிழகத்தில் பெரும்பாலும் இவை வழங்குதலைக் காணுதல் அரிது. எனினும் தமிழகத்தின் தென்பகுதியாம் குமரி மாவட்டத்தின் சில ஊர்களில் ‘மழையத்து நனைந்தான்’ என்ற தொடரில் –அத்து– வழங்கி வருவது கேட்டு மகிழ்தற் குரித்தாம்.

மேற்கூறிய இடங்களில் -அத்து- ஏழாம் வேற்றுமைப் பொருள் உடையதா என்பது ஆய்தற்குரித்து. தொல் காப்பியனுர்

ஏழாகுவதே,

> கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
> அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே
> (சொல். 81)

எனக் குறிப்பிட்டுள்ளார். பனியத்து, வளியத்து, மழையத்து, விண்ணத்து, வெயிலத்து, இருளத்து என்பவற்றில் 'கண்' உருபு இல்லாது போயினும், அது வழங்கும் காலம், இடம் நிலம் ஆகியவற்றில் ஒன்றனையே -அத்து- குறித்து நிற்கிறது என்பது பொருளை ஆராய்வார் தெளிவாக அறிதல் இயலும். எனவே இவ்விடங்களில் வழங்கும் -அத்து- வெற்றுருபு (empty morph) அன்று; ஏழாம் வேற்றுமை உருபின் மாற்றுருபேயாகும் (allomorph)

மழை + அத்து + நனைந்தான்
மழை + கண் + நனைந்தான்
அத்து = கண்.

தொல்காப்பியனார் வேறு சில இடங்களிலும் -அத்து- வழங்கும் என்றார்.

1. கலம் என்னும் சொல் குறை என்னும் சொல்லோடு இணைந்து வரும்போது.

கலம் + அத்து + குறை > கலத்துக்குறை (எழு. 168) என வழங்கும்.

கலம் + த் + உ + குறை > கலத்துக்குறை

2. நிலா + அத்து + கொண்டான் > நிலாத்துக் கொண்டான் (எழு. 228)

நிலா + த் + உ + கொண்டான் > நிலாத்துக் கொண்டான்

3. மக + அத்து + கொண்டான் > மகத்துக் கொண்டான் (எழு. 219)

மக + த் + உ + கொண்டான் > மகத்துக் கொண்டான்

4. மகம் + அத்து + ஆன் + கொண்டான் > மகத் தாற் கொண்டான் (எழு. 331)

மகம் + த் + ஆன் + கொண்டான் > மகத்தாற் கொண்டான்

5. ஆயிரம் + அத்து + ஒன்று > ஆயிரத்தொன்று (எழு. 317)

ஆயிரம் + த் + ஒன்று > ஆயிரத்தொன்று

மேற்கூறிய எடுத்துக்காட்டு ஒன்றில் ஆறும் வேற்றுமைப் பொருளிலும், இரண்டு, மூன்றில் ஏழாம் வேற்றுமைப் பொரு

ளிலும் -அத்து- (த் + உ / து) வழங்குகிறது எனலாம். உயிர் முன் வல்லினம் வரின் இரட்டிக்கும் (geminates) என்னும் விதிப்படி மேற்கண்டவைகளைப் பொருத்திக் காணல் இயலும். இங்கு வழங்கும் உறுப்பை -து- அல்லது த் + உ என இரு உறுப்புகளாகவும் (elements) கொள்ளலாம். எடுத்துக் காட்டுகள் நான்கு, ஐந்தில் காணப்படும் -த்- வெற்றுருபனே (empty morph) ஆகும். மரத்தினை < மரம் + அத்து + இன் + ஐ = மரம் + த் + இன் + ஐ இங்கு -த்-, -இன்- ஆகிய இரண்டு வெற்றுருபுகள் இணைந்து வந்துள்ளன. இலக்கண நூலார் கொள்கைப்படி சாரியை -அத்து- < -த்து- என வழங்கும். மொழியியலார் காணும் தெளிவுப்படி -அத்து- வெற்றுருபனாக வழங்குதல் இல்லை. பண்டைக் காலத்தில் அது வேற்றுமை உருபின் மாற்றுருபாக வழங்கியுள்ளது. அதன் சில வழங்குகள் இன்று உள்ளனவும் ஏழாம் வேற்றுமையின் மாற்றுருபாகவே வழக்குகின்றன. -த்- தான் இன்று வெற்றுருபனாக வழங்குகின்றது. அது உயிர்முன் வருங்கால், மர(ம்) + த் + ஐ இரட்டித்து நிற்கும்.

மேற்கூறிய விளக்கங்களால் -அத்து- சில குறிப்பிட்ட இடங்கள் தவிர ஏனைய இடங்களில் அது வேற்றுமைப் பொருளில் வழங்குகின்றது எனவும், அதன் முழு உருவம் இன்று வழக்கில் காணக் கிடைப்பது அரிது என்பதும் தெளிவு -த்- (-அத்து-) அஃறிணைப் பெயரின் திரிபு என்றும் (திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம் பக். 263) அது ஆறும், ஏழாம் வேற்றுமைப் பொருட்களில் வழங்குகின்றது எனவும் (தி. மொ. ஒ. 265) டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். குளத்து மீன் (< குள(ம்) + த் + (உ) மீன்) என்னும் சொற்றொடரைக் குளத்தினுடைய மீன் என ஆறும் வேற்றுமைப் பொருளிலும், குளத்தில் வாழும் மீன் என ஏழாம் வேற்றுமைப் பொருளிலும் கொள்ளலாம் என விளக்கிக் காட்டுகிறார்,

-த்- (< அத்து) வேற்றுமை உருபை ஏற்று நிற்கும் இடங்களில் மாத்திரம் வெற்றுருபு ஆகும். மற்றைய இடங்களில் அது வேற்றுமை உருபுகளின்மாற்றுருபேயாம். இம்முடிவு டாக்டர் கால்டுவெல்[3], பேராசிரியர், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்[4] ஆகியோர் "சாரியைகள் பண்டைகால வேற்றுமை உருபுகளே" என்று கூறி உள்ளதைத் தழுவியே ஆய்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

---

3. A comparitive Grammar of Dravidian Languages—Dr. Caldwell. 259—260—1961.

4. Indian Linguistics—Turner Jubilee Vol. II. 1959.
(The socalled inflexional increments in Tamil—Prof. T.P.M.)

# இரும்பாழி

வித்துவான். சி. கோவிந்தராசனார்,

தமிழக வரலாற்றில் இடம்பெறும் பள்ளியும் பாழியும் சமணப் பெருமக்கள் கலை வளர்த்த பேரிடங்களாகும். பள்ளியில் எண்ணும் எழுத்தும் மாணவர் பயில, முதுபெரும் சித்தராம் சமண முனிவர் வாழ் பாழியில் மருத்துவம், சிற்பம், ஓவியம் போன்ற அருங்கலைகள் ஆய்வுடன் வளர்க்கப் பெற்றதுடன், பாலி மொழியிலும் வட மொழியிலும் இருந்த சிறந்த நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றும், சமணத்தின் கோட்பாடுகள் கதைப்போக்கில் இலக்கிய வடிவில் யாக்கப் பெற்றும், நாட்டில் மக்களிடையே பழக விடுதற்குரிய கருவூலமாகவும் பாழிகள் இடம் பெற்றன. இத்தகைய பள்ளிகளும் பாழிகளும் செயற்கையில் எழுந்த கட்டிடங்களாகவும் இயற்கையில் அமைந்த மலைக் குகைகளாகவும் இருந்தனவாயினும், இன்று அவை உரிய வடிவிற் கண்டறிதற்கியலாத வகையில் சிதைந்தும் புதைந்தும் நிலைமாறியும் பெயர்மாறியும் தமிழகத்தில் ஆங்காங்குக் கிடைக்கின்றன.

பள்ளிகளும் பாழிகளும் நிலைத்திருந்த ஊர்கள், அவ்வவற்றின் பெயர்களைக் கொண்டே பெயர் பெற்றிருந்தன வென்பதை, சிராப்பள்ளி, பெரும்பள்ளி, பாழி, பெரும்பாழி, இரும்பாழி என்னும் ஊர்ப் பெயர்களால் நன்கறியலாகும். இவற்றுள், இறையனார் களவியலுரை மேற்கோள் பாடலாக வந்துள்ளதும் 'பாண்டிக் கோவை' என்று சுட்டப் பெறுவதுமாகிய செய்யுட்களில் பாட்டுடைத் தலைவனைக் கொண்ட, 'பன்னிய தீந்தமிழ் வேந்தன் பராங்குசன்,' 'ஆடல் நெடுங் கொடித்தேர் அரிகேசரி' என்றெலாம் சிறப்பிக்கப்படும் பாண்டியன், 'பாயப் புரவி கடாய் வந்து பகை மலைந்தாரை' பாழி யென்னுமிடத்தில் புறங்கண்டதாகக் கூறப்பட்டுளது.

இத்தகைய பாழிகளுள் ஒன்றினைக் கண்டு ஆராய்ச்சி செய்யும் அவாமிகுந்திருந்த வெமக்கு வடகோனாட்டின் ஒரு பகுதியான புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக் கல் அளவில் அண்ணல் வாயில் கூற்றத்துள் அடங்கிய இரும்பாழி என்னும் ஊர் இலக்காகியது. சென்ற 22-10-62-ல் யான் இரும்பாழியினைக் கண்டு ஆராய்ச்சி செய்யச் சென்றபோது, கல்வெட்டுகளைப் படித்தறியும் அவாவுடன் என்பாற் பயிற்சி பெறும் இராசை. மு. கந்தசாமி, பொ. பழநியப்பன், அண்ணல் வாயில் அரங்கசாமி ஆகிய தமிழ் மாணவர்கள் உடன் வந்தார்கள். புதுக்கோட்டையிலிருந்து அண்ணல் வாயிலுக்குச் செல்லும் பேருந்து வண்டியில் இடம் பெற்ற யாங்கள் இரும்

பாழிக்குச் செல்லும் குறுக்கு வழியாக அமைந்த மதிய நல்லூரில் இறங்கி வழிக் கொண்டோம்.

முத்தரையர் காலத்தில் கோனாட்டில் விளங்கிய பெருநகரங்கள் ஏழனுள் ஒன்றாக விளங்கிய இரும்பாழி, இன்று குறுகி, காடு மேடாக வரிசிலற்றுக் கிடக்கும் இடிபாடுகளும் தரிசுகளும் நிறைந்த சிற்றூராக இருப்பினும் பழம் பொருளாராய்ச்சிக்கோர் நிலைக்களனாகும்.

ஊரின் வடபுறத்தில் காடடர்ந்த பகுதியில் இடிந்து தரை மட்டமாகிக் கிடக்கும் பெரியதொரு கற்றளி ஆராய்ச்சியாளர்க்கோர் இலக்காகும். கள்ளியும் முள்ளியும் மரங்களும் நிறைந்து எழுந்து அடர்ந்து வழியின்றியிருப்பினும், மிக முயன்று இடிபாடுகளின்மேல் ஏறியும் மரங்களைத் தழுவியும் உள்ளே சென்றோம். புதர்களினிடையே ஆங்காங்கு தலை நீட்டும் அடிப்படை வரிசையினைக் கொண்டு, அக்கற்கோயில் கீழ் மேல் இருநூறடி நீளமும், தென்வடல் நூற்று இருபதடி அகலமும் கொண்டுள்ளதைத் திட்டமாக அளந்தறியலானேன. கோயில் கிழக்கு நோக்கியுள்ள தென்பதற்குரிய அறிகுறியைப், புதரினுள்ளிருந்து ஒன்பதடி இடைவெளியளவில் இணைந்த பாங்கில் எழுந்து நிற்கும் இரண்டு நிலைச்சட்டக் கற்கள் உணர்த்துகின்றன. எனவே, அது முதல் கோயிலின் உட்பகுதிகளை முறையே, தலைவாயிலாகிய தோரணவாயில், திருமுற்றம், தோற்ற மண்டபம், பெருமண்டபம், வார மண்டபம் கருவறை ஆகிய பகுதிகளுடன் ஒப்பனை மண்டபமும் கொண்ட கோயிலென்பதை முயன்று அறியலானேன். கருவறைப் பகுதியிலோ மற்றைய விடத்திலோ எத்தகைய திருவுருவங்களும் கிடைத்தில. கருவறையமைந்த இடமாகும் கற்குவியலிடையே சிக்கி நின்ற நாற்புற மனைக் கல்லின் அமைப்பினைக் கொண்டு, அஃது அக்கோயிலில் எழுந்தருளப்பெற்ற திருமேனியை அமைத்த இருக்கையணைக் கல்லென்பது புலனாயிற்று. அக்கல்லின் நடுவே குடையப்பட்டிருந்த குழிவு, உள்ளே ஓடியவளவில் குறுகும் கூம்புக் குழிவாக இருந்தது. சிலைகளை நிறுத்தும் இருக்கைமனைக் கற்களின் சிற்ப இலக்கண முறையைக் கொண்டு ஆராயின், இதன்மேல் இரண்டு முழவளவில் உயர்ந்து நின்ற திருமேனி அமைக்கப்பட்டிருந்த தென்பது புலனாகும். கருவறைப் பகுதிக்கு வடபால் கள்ளிப் புதர்கட்கிடையே தலை தூக்கி நிற்கும் கற்சுவரில் கல்வெட்டுப் பகுதிகள் இருக்கின்றன. நெருங்கிச் செல்ல வழியின்மையின் கல்வெட்டுச் செய்தியினைப் படித்தறிய வியலவில்லையாயினும், எழுத்துக்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழெழுத்துக்களாகும். எனவே, இக்கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சில நூற்றாண்டளவிலும் நன்னிலையிலிருந்து அழிந்திருக்க வேண்டுமென்பது தெள்ளிதின்

விளங்குகின்றது. இப்பகுதியினைக் காராள மன்னர் ஆண்டதாக ஊரவர் தெரிவிக்கின்றனர். வரலாற்றில் காராளரைப் பற்றிய ஆய்வுக்குரிய சான்றுகள் இன்னும் கிடைத்திலதாதலின் விடுத்து மேற்செல்வோம்.

பின்னர், இரும்பாழியின் தென்புறப் பகுதியாகும். கள்ளன் பட்டி என்னும் பகுதியினைக் காணலுற்றேன். பாறை நிலப்பகுதி மிகுந்த இங்கு, யானைகளைப் போன்றும், குடிசைகளைப் போன்றும், வைக்கோற் போரினைப் போன்றும், பனையளவுயர்ந்த கோபுரத்தினைப் போன்றும் பாறைகள் நிலமகளின் எழிலை எடுத்துக் காட்டுவன போன்று எழுந்து கலந்து நிற்கின்றன. மாமல்லபுரத்தில் கற்கோயில்களைக் கண்ட மன்னவர், இப்பகுதியினைக் கண்டிருப்பின் இங்குள்ள பாறைகள் சிற்பச் சுவட்டால் சித்தரிக்கப்பட்டிருக்குமென்பதற் கோரையமில்லை.

இப்பகுதியில், ஆங்காங்குச் சுனைகள் மிகுதியாக இருப்பதால் தரை நீர்க்கசிவு பெற்றிருப்பதுடன், சிற்சில பகுதிகளில் ஊற்றெடுத்தும் ஓடுகின்றன. ஊற்றேற்பட்ட பகுதிகளினால், நிலத்தில் அரிப்பு ஏற்பட்ட சுவடுகள் நிறைந்திருக்கின்றன. ஒரு பகுதியில் அமைந்த குழியில் பல தாழிகளின் சிதைவுகள் காணப்பட்டன. ஒரு தாழியினுள் சிதைந்த எலும்புகளுடன் மண்ணோடு மடிந்த இரும்புக் கத்தியின் துண்டுகளும், சிகிமுகிக் கற்களும் இருந்தன. தாழிகள் மிகப் பழைய காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

இவ்வாறான பழமைகளோடு விளங்கும் இப்பாழியினைச் சார்ந்தே, முத்தரைய மன்னர் நிகழ்ந்திய அண்ணல் வாயில் போர்க்களப் பகுதி தரிசாக இன்றுமுளது. பாண்டிக் கோவையுள் கூறப்பெறும் தென்பாழிப் போர் நிகழ்ந்த பாழி இவ்விரும்பாழியாகவே இருக்க வேண்டுமென்பதையும், இங்கு சமணரின் வாழ்வு நிறைந்திருந்த தென்பதையும் வரையறை செய்ய எஞ்சியதாகவுள்ள சான்றுகள் விளக்கமுறுமளவிலும் இரும்பாழியின் வரலாறு எஞ்சியதாகும்.

# களவியல் உரை நலம்

## (முதல் நூற்பா உரை)

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

### 1. முதல் நூற்பா

களவியலின் வரலாற்றையும் அதன் உரை வரலாற்றையும் ஒருவாறு துணிந்தேம், இனி, எம் உளமமர் குரவராய மறைமலையடிகள் இணையடி வழுத்தி, இக்களவியற் கண் பயிலும் பாயிரத்தமைதியும் அதன் உரையமைதியும் நோக்குவாம். எட்டிரண்டு மறியாத ஏழையே மாய எம் சிற்றறிவின் பயத்ததாய இவ்வாய்வின்கண் படுங் குறைகளை, அறிஞர் பெரு மக்கள் எடுத்துக் காட்டி அவைகளை நிரப்பும் வகையும் உதவுவராயின் அவர்கள் எம் தமிழன்னைக் காற்றும் பணி கருதியும் எமக்குத் தரும் அறிவு விளக்கம் கருதியும் எஞ்ஞான்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்.

> "அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
> அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
> கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்."

என்பது இறையனார் களவியலின் முதல் நூற்பா. இந் நூற்பா நுதலியது நுவலத் தொடங்குங் காறும் பாயிரத்திலக் கணமும் அவ்விலக்கணம் இந்நூற்கமையுந் திறனும் பேசப் படுகின்றன. ஆயினும் பரிமேலழகியார், அடியார்க்கு நல்லார் போன்றார் உரைக்கண் பயிலும் உரைப்பாயிர மொன்று இந் நூலின் கண் பயிலாமை கருதற்பாலது. பாயிரத்திலக்கணம் நன்னூலில் மிக விரிந்து நடத்தலால் ஈண்டு அது பற்றி உரைத்திலம். வேண்டுவார் அந்நூலிற் காண்க. பாயிரமே பயிலாத இந்நூற்குப் பாயிர ஆசிரியர் அதனைத் தந்தமைகின்றார். இப்பாயிரம் முச்சங்க வரலாற்றையும் நமக்கு அறிவுறுத்தும் முழு மணியாகத் திகழ்கின்றது. அடியார்க்கு நல்லாரும் இதனையொட்டியே மேலுஞ் சில வரலாறு தந்தமைகின்றார். ஆகலின் இப்பாயிர ஆசிரியர்க்குத் தமிழகம் சிறப்புச் செய்யுங் கடம் பூண்டுள்ளது என்பது எம் கருத்து.

### 2. முச்சங்க வரலாறு

இனி, முச்சங்க வரலாறு யாவரும் உணர்ந்து தெளிதற் குரிய முதன்மையுடைத் தாகலின், அதனை ஈண்டுத் தருதும்.

"தலைச் சங்கம் இடைச் சங்கம், கடைச் சங்கமென மூன்று சங்க மிரீஇயினர் பாண்டியர்.

"அவருள், தலைச் சங்க மிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருக

வேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினா ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியா விரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவரைச் சங்க மிரீஇயினர் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈருக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங் தேறினர் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

"இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனரும், தொல்காப்பியனரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும் சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும் வெண்டாளியும், வியாழ மாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும் என இவை. அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்க மிரீஇயினர் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீருக ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினர் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

"இனி, கடைச்சங்கமிருந்து தமிழாராயந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனரும், அறிவுடையரனரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திரு மாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனரும், மதுரை மருதனிள நாகனரும், கணக்காயனர் மகனர் நக்கீரனரும், என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானுற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும்; புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும் சிற்றிசையும், பேரிசையுமென்றித் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமு மென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல் கொள்ளப்

பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினர் மூவரென்ப. அவர் சங்கமிருந்து தமிழா ராய்ந்தது உத்தர மதுரை என்ப."

### 3. சங்க வரலாற்றுண்மை

முத்தமிழ் என்பதே வெறும் அழகுச் சொல். இரு தமிழ் கூடக் கிடையாது. என்னை ? தமிழர் இசை கற்க வேண்டுமெனின் தியாகராசர் உருப்படிகளுக்குத் தான் தவங் கிடந்தாக வேண்டும் எனத் தமிழின் எதிரிகள் பழிப்புரை பகன்ற காலத்தே, மூவர் முதலிகள் அருளிய தேவாரத் திருப் பதிகங்களே முத்தமிழாயிலங்குவது என்ற உண்மைகூட அறியாது தமிழர் பொச்சாந்து தம்பெற்றியிழந்துழன்றனர். பின்னரே சிலப்பதிகாரம் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர் களின் அயரா உழைப்பினால் வெளிவந்து, தமிழரிடை நிலவி யது. முக்கண் உடைய முதல்வன் ஆய்ந்த தமிழ் மூன்று என ஐயமின்றி அறிவுறுத்தியது.

இனி, எம்மொழிக்கு மில்லாத் தனிச் செல்வங்களாய்த் தமிழ் மொழிக்கமைந்தவை இரண்டு. அவற்றுள், கற்றுவல்ல புலவரோடு கண்ணுதற் பெருங்கடவுளுமிருந்து கன்னித் தமிழ் ஆய்ந்த கழகம் ஒன்று. மற்றொன்று அவன் திருவருள் கூடப் பெற்ற புண்ணியர்கள் அவன் திருவடி பரவியருளிய திரு முறைகள்.

இத்துணைச் சிறப்பு தமிழுக்கெய்துதல் பொறாத சிலர் சங்க வரலாற்றின் கண் ஐயம் நிகழ்த்தினர். அதற்கேற்ப, சங்க நூற்கள் புத்துயிர் பெறுங்காறும் சங்க வரலாறு செவி வழிச் செய்தியாயே இருந்து வந்தது. 'நன் பாட்டுப் புலவ னாய்ச் சங்க மேறி, நற் கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்,' என்ற வாகீசர் வாக்கும் 'சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ என்ற குமரகுருபரர் குறிப்பும் ஏனைய சான்றோர் உரைகளுமே சங்கமிருந்தமைக்குச் சான்ற யமைந்தன.

சங்க நூல்கள் வெளிவந்தும் சங்கம் என்பதே தமிழ்ச் சொல் அன்று. எனவே சங்கமிருந்தமையாய செய்தியும் பொருளுரை யன்றென நிறுவப் பெருமுயற்சி கொண்டனர். தொல்காப்பியத்துள்,

"சகரக் கிளவியு மவற்றோ றற்றே
அஐ ஔஎனு மூன்றலங் கடையே"

எனவரும் நூற்பாவினைத் தம் துணிபுக்கு மேற்கோளாகக் காட்டுவர். இவர்கள் இந்நூற்பா பற்றி யெழுந்துள கருத்து வேற்றுமை பற்றி கவலைப் பட்டார்களில்லை. இவ்வாறு சங்க

உண்மையினை மறுக்க விழையும் இவர்கள் அறியாமையாற் பற்றப்பட்டார். ஆணவ மலத்தினாற் பற்றப்பட்டார், அழுக்காற்றினாற் பற்றப்பட்டார் என முப்பகுதியர் ஆவார்கள். இவர்களுள் அறியாமையாற் பற்றப்பட்டார்க்கே அறிவு கொளுத்த நூல்களெழுந்தமையால் யாமும் ஏனைய இருபகுதியினருக்கும் உரைக்கக் கடவேமல்லேம்.

நம் தொன்னூல்களை நோக்குழி, உரையாசிரியர்கள் காலம்வரை சங்கவரலாறு தக்க சான்றுகளோடு உணர்தற்கு இடமிருந்தது என்பது தெளிவாம். பின்னரே அச் செய்திகள் சிறிது சிறிதாக மறக்கப் பட்டுச் 'சங்கத் தமிழ்' எனச் சொல்லும் நிலை ஒன்றினையே யடைந்தது. அவ்வாறு உரைத்தல்கூடப் புராண மரபிற்றென்ற பிழைப்பட்ட கருத்தே நிலவியது. எனவேதான் தமிழின் உயர்வைத் தமிழருக்கே அறிவுறுத்திய கால்டுவெல் ஐயர் கூடச் சங்கம் பற்றி யாதும் சாற்றினரில்லை.

மேலே காட்டிய வரலாற்றை உற்று நோக்குவார்க்கு, இப் பாயிர ஆசிரியர் காலத்தேயே தலைச் சங்க நூற்கள் இன்னவை என்று நன்கு அறியக் கூடவில்லை என்பது புலனும். ஆயினும் தலைச் சங்கத்து நூலாய அகத்தியம் உரையாசிரியன்மார் உரையில் பயின்று வருதலால். அந்நூல் ஒன்றையே அவர்கள் கண்டனரெனக் கோடலிற் பிழையேதுமின்று. அதுவும், 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன" என வரூஉம் அடியார்க்கு நல்லாருரையால், முழுமையாகப் பெற்றிலர் போலும் என்றே கருதுதல் வேண்டும்.

இனித், தலைச் சங்க வரலாற்றின் கண் முப்புரமெரித்த முன்னவனையும் முருக வேளையும் முதற்கண் வையாது அகத்தியனுரை முதற்கண் வைத்த செய்தியால் ஒன்று உய்த்துணரற் பாற்று. அவ்விருவரும் ஏனைய புலவன்மார்போல என்றுமச் சங்கத்திருந்து தமிழாராய்ந்தனரல்லர். ஏனைய புலவன்மார்க்கு உற்றுழி உதவி, தமிழ் ஆய்வைச் செந்நெறி உய்த்துத் திருவருள் சுரந்த தன்மை பற்றியே அவர்களும் புலவர்களாக வைத்தெண்ணப்பட்டாலும் புலவர்க்குப் புலவராய அவர்களையும் ஏனையரோடு வைத்து ஒருங்கெண்ணுதல் கூடாது. எனவேதான், அவர்களை முதற்கண் வைத்துக் கூறின் அவர்களையும் புலவராக ஏனையரோடு வைத்தெண்ணிய பழிசேரும் என்ற கருத்தால் தலை தடுமாற்றம் தந்து புணர்ந்துரைத்தாரென அறிக. தலைச் சங்கத்தார்க்கு நூல் அகத்தியம் என்ற செய்தியும் இம்முடிபினை வலியுறுத்தும்.

இனி. இடைச் சங்கத்து நூல்கள் உரையாசிரியர்கள் காலந்தொட்டே அழிவுறும் நிலை யெய்தின. பெருங் கதை

இயற்றிய கொங்கு வேளிர் என்பார் இடைச் சங்க நூல்களில் இணையற்ற புலமையுடையவரென்பது சிலப்பதிகார உரையால் பெறப்படும். எனவே தமிழர் தம் செந்நெறி பிறழ்ந்து பொச்சாப்புக் காட்பட்ட ஏதத்தால் வெகு அண்மைக் காலத்தேயே பெறற்கரும் செல்வமாகிய இடைச் சங்க நூல்களை இழந்தனர் என்பது தெளிவாம்.

இனிக், கடைச் சங்க நூற்களில் பெரும்பானமை எய்தப் பெற்றுச் சிறுபான்மை யிழக்கப் பெற்றோம். எய்தப் பெற்ற பெரும்பான்மையுளும். ஒரு நூலேனும் முழு வடிவில் பெற்றன மில்லை, ஒவ்வொன்றிலும் சில பாக்கள் குறைந்தும், அடிகள் அழிந்தும் சொற்கள் சிதைந்துமே உள்ளன. இஃதும் தமிழர் தம் தவப்பயன் குறைவாலேயே என்க.

இனி, இச்சங்கங்களில் தலைச் சங்கத்தினும் இடைச் சங்கமும், இடைச் சங்கத்தினும் கடைச் சங்கமும் ஆண்டெண்ணிக்கையிலும் ஆசிரியன்மாரெண்ணிக்கையிலும் அரசரெண்ணிக்கையிலும் அருகிவருதல் காண்க. இச்சங்கமிருந்த புலவரெண்ணிக்கை தலைமைப் புலவராயமர்ந்தார் தொகையினைக் குறிக்குமென்று கொள்ளல் வேண்டும் என்னை? அவருள்ளிட்டு இத்தனை பேர் பாடினரென்ற செய்தியும் உடனே தொடர்தல் காண்க. கவியரங்கேறிய காவலர் எண்ணிக்கையும் தலைமையேற்ற தகவினரையே குறிப்பதென்க. இவ்வாறு கொள்ளின் இவ்வரலாறு பற்றி எழும் பல ஐயங்களகன்று விடும். தொகை நூல்களில் காணப்பெறும் புலமைத் திறம் பெற்ற புவி வேந்தர் பலருளராகக் கவியரங்கேறினர் மூவர் என்ற கூற்று முறையோ என்னும் ஐயம் இதனால் எழாது.

ஆயினும், கடைச் சங்கத்தினும் இடைச் சங்கம் ஆண்டெண்ணிக்கை மிகுந்தும் புலவரெண்ணிக்கை குறைந்தும் காணப்படும். இஃது ஏடெழுதுவார் தவறால் நூறு என்ற எண்ணிக்கை விடுபட்டு ஐம்பத்தொன்பது மட்டும் நின்றது எனக் கருதற்கும் இடனின்று. என்னை? அடியார்க்கு நல்லார் போன்ற ஏனைய உரையாசிரியன்மார் உரையிலும் இவ்வெண்ணிக்கையே பயில்வதாகலின். எனவே, இடைச் சங்கம் பல இன்னல்களுக்காளாய் இடை விட்டு விட்டு நடந்ததென்பது பெறப்படும். இடைச் சங்க காலம் இராமாயண காலமாதலின் அரக்கர் வேந்தனாகிய இராவணனால் தமிழ் நாடு பெரிதும் அலைப்புண்டிருத்தல் வேண்டும். பொதிய மலையின் கண் இருந்த அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்துத் தமிழ் நாட்டை அவனது அலைப்பினின்றும் மீட்டனர் என்று பத்துப் பாட்டின் உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுதல் தக்க சான்றாதல் காண்க. எனவே இடைச் சக்கம் ஏனைய சங்கங்களைப் போலாது பல துன்பங்களுக்கு

ஆளாகி இடை விட்டு விட்டு நடந்ததே, ஆண்டெண்ணிக்கை மிகுந்தும் புலவர், புரவலர் எண்ணிக்கை குறைந்து முள்ள மைக்குக் காரணம் என அறிக.

இனிக், கடைச் சங்கத்துப் பாடிய நூல்களின் வரிசையில் "**நூல்**" என்று இடு குறியாற் பெயர் பெற்றதோர் நூல் பற்றிய செய்தி குறிப்பிடாமை காண்க. இதனால் 'நூல்' எனப் பெயர் பெற்று அடியார்க்கு நல்லாரால் எடுத்தாளப் படும் நூல் கடைச் சங்க காலத்ததன்று பிற்பட்டதே என்பது தேற்றம். எவ்வாறுயினும் அந்நூல் பற்றிய செய்தி வேறு ஏதும் கிடைத்திலதாகலானும் அது சங்க காலத்த தன்றாகலானும் அது பற்றிய ஆய்வு ஈண்டைக்கு வேண்டுவ தன்று.

"மற்றும் அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது" எனவரூஉம் ஐயுறவே இஃது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரை அன்றென்பதை வலியுறுத்தும். என்னை? கடைச் சங்கத்திருந்தார்க்கே இடைச் சங்க முடிவு பற்றி இத்துணை ஐயப்பாடெழக் காரண மின்றாகலின்.

இனி, இதனுள் கூறப்படும் உத்தர மதுரை என்பது இப் போதைய மதுரைக்கு அணித்தாயிருந்த கூடல் நகரமாம். இது பற்றியதோர் செய்தியினை ஈண்டு குறித்துச் செல்லல் அமைவுடைத்து.

### 4. சங்கம் கண்ட மதுரை

சங்கமிருந்த மதுரையைக் குறித்து இரு அறிஞர் பெரு மக்கள் இரு வேறு கருத்துக்களை வெளியிட்டனர். டாக்டர், மா. இராசமாணிக்கனார் அவர்கள் மேலே கண்ட எளியேன் றன் கூற்றை அரண் செய்யும் பெற்றி வாய்ந்த சங்க காலக் கூடல் வேறு தற்போதைய மதுரை வேறு என்ற முடிவை நிறுவியுள்ளனர். திரு. அ. அறிவொளி அவர்கள் (தமிழ்ப் பொழில்—சித்திரை வைகாசி) தற்போதைய மதுரையே சங்க காலக் கூடல் என நிறுவ முயன்றுள்ளனர். இவர் வையை நதியே இடமாறிய தென்றும் மதுரை வையையின் வட கரையிலும் திருப்பரங் குன்றம் தென் கரையிலும் அமைந் தனவாதல் வேண்டும் என்றும் உரைப்பர்.

வையை நதியின் போக்கு மாறிய தென்பது உடம்பாடே. ஆயினும் மதுரை வையையின் வட கரையிலும் திருப்பரங் குன்றம் தென் கரையிலும் இருந்தன என்று கூறல் பிழைபடு வது என்க. என்னை? அவையிரண்டும் ஒரே கரையில்— தென் கரையில்—இருந்தமையாற்றான் நக்கீரனார்

"மாடமலி மறுகிற் கூடற் குடவயின்"

என்றுரைத்துப் போந்தார். ஆக, தென் கரையிலிருந்த மதுரை வட கரையிலிருந்ததாகத் தம் கற்பனைக் கண்ணுற் கண்டு அதற்கேற்பக் 'குடவயின்' என்ற சொற்குத் தென் மேற்கு என உரை காணப்புக்கு அறிவொளியார் இடர்ப்படு தல் இரங்கற்பாலதே. என்னை ?

" மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி
வானவர் உறையும் மதுரை வலங்கொள "

என மதுரை தென் கரையிலிருந்த செய்தியைச் சிலப்பதி காரம் செப்பல் காண்க.

அண்ணலார் கோயிலும் பொற்றாமரைக் குளமும் மாற்ற வும் மாற்றப்படவும் அத்துணை எளிமையுடையன அல்ல என் பது ஏற்புடைத்தேயன்றோ யெனின் அறியாது கடாயினாய். சங்க காலக் கோயில் சுடு மண்ணாலியன்றது கற்கோயிலன்று என அறிக. அன்றியும் சங்க காலக் கோயில் நுதல் விழி நாட்டத் திறையோன் கோயிலாகவும் முக்கட் செல்வர் நகரா கவும் பேசப்படும். இப்போதைய கோயிலோ மீனாட்சியம் மையார் கோயிலாக வழங்கப்படும். இஃதொன்றே அக் கோயில் வேறு இக்கோயில் வேறு என்பதைக் காட்டிவிடும். அன்றியும் களவியலும் அதனைத் தேவர் கோட்டமாகவும் தேவர் குலமாகவும் கூறுமேயன்றி தேவி கோட்டமாகக் கூறாமையும் நோக்குக என்பது.

கோவலன் கொலையுண்டதும் கூடலினுள்ளே பொற் கொல்லன் மனையருகு என்பர். கூடல் இடமாறவில்லையேல் அவன் கொலையுண்ட இடம் மதுரையினின்றும் நீங்கி மதுரை —திருப்பரங் குன்றச் சாலைக் கண்மையில் போதற் கேது வின்றே! எனவே சங்க காலக் கூடல் வேறு தற்போதைய மதுரை வேறு என்ற முடிபே ஏற்புடைத்தாம்.

## 5. கேட்போர் என்றதன் உரை

பாயிரத் திலக்கணம் பகர்ந்த பின்னர், ஆக்கியோன் பெயர் என்றற்கு மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவா யிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங் கண்ணி யாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள் எனவும் வழி என்றற்கு முதல் நூல் எனவும் எல்லை என்றற்கு வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் எனவும் நூற் பெயர் என்றற்குக் களவியல் எனவும் யாப்பு தொகுத்தல் எனவும் நுதலிய பொருள் என்றற்குத் தமிழ் எனவும் உரைப்பர்.

(தொடரும்)

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

**இளஞ்சேரல் :—**

சபைகூட்டி ஆராய்வோம் அமைச்சர் கூறும்
கூற்றினிலும் உண்மையுளதறிகின் றேன்யான்
குறிப்பின்றி அவரெதுவும் கூறமாட்டார்

**படைத்தலைவன் :—**

தோற்றிடுவோம் எனும் நினைப்பில் சொல்கின்றீரோ?
தொல்லைநமக் கேனென்னும் நினைவா ? ... ...

**அமைச்சர் :—**

... ... ... ... ... ... மன்னா
ஆற்றலினை அவமதிக்கும் பேதை யல்லேன்
அட்சிநெறிக் களவுண்டு ... ... ... ...

**இளஞ்சேரல் :—**

... ... ... ... ஆம்நாளை பார்ப்போம் (219)

[சேரன் சிந்தை தெளிவில்லாமற் செல்லுகிறான் அமைச்சர் அமைதியாகப் போகிறார்]

இருபதாங் காட்சி முடிவு

---

## காட்சி 21.

நடிகர் : சேரநாட்டமைச்சர்
சரத்குமாரன்
சேரர்படைத்தலைவன்

இடம் : அரசமாவீதி
காலம் : முற்பகல்

[இரும்பிடர்த்தலையார் தனிப்பட்ட முறையில் தமக்கு அனுப்பிவைத்துள்ள ஓலைச் செய்தியைச் சிந்தித்தவாறே சேர நாட்டின் தலைமை அமைச்சர் வந்துகொண்டிருக்கிறார் அப்பொழுது ஆட்டனத்தியைப்பற்றி விவரமறியச் சென்ற சரத்குமாரன் அவரை எதிர்ப்படுகிறான்]

**அமைச்சர் :—** (தனியே)

செப்பியர்க்கும் சேரர்க்கும் உறவுமூளும்
செவ்வியுரு வாவதுநன் கறிந்தா லன்றி
நம்பி இரும்பிடர்த்தலையார் ஓலைச் செய்தி
நமக்கனுப்பி வையார்இப் படைத்தலைவன்
வெம்புமொழி ஆயாமல் பேசு கின்றான்
விளைவறியாச் சிறுவர்கள்பால் செய்வ தென்ன ?

**சரத்குமாரன் :—** [வந்து வணங்கி]

கும்பிடுகின் றேன்ஐயா ! தாங்கள் இந்த
குடக்கோவின் அரண்மனையில் உள்ளீரோ?யான் (220)

மன்னரையோ அமைச்சரையோ காண வேண்டும்
மனங்கனிந்திச் சிறுஉதவி செய்வீ ராநீர் ?

**அமைச்சர் :—**

என்னசெய்தி? நீயார் சொல்? ... ...

**சரத்குமாரன் :—**

... ... ... ... சோழ நாட்டில்
இருந்துவரு கின்றேன்; ஓர் ரகசியத்தை
மன்னனிடம் கூறியுண்மை அறிய வேண்டும்

**அமைச்சர் :—**

மறைக்காமல் என்னிடஞ்சொல், நானே உன்னை
மன்னரிடம் கொண்டுசெல்லு கின்றேன் ... ...

**சரத்குமாரன் :—**

... ... ... ... ... ... தாங்கள்

**அமைச்சர் :—**

மதியமைச்சன் ... ...

**சரத்குமாரன் :—** (முகமலர்ந்து)

அப்படியா வணக்கம், உங்கள் (221)

சேரமன்னர்க் கடையாளம் எதுவும் உண்டோ ?

**அமைச்சர் :—**

சிறப்பாக விற்கொடியும் பனம்பூ வும்தாம்
வீரமுண்டு ... ... ... ... ... ...

**சரத்குமாரன் :—**

... ... வேறெதுவும் உடம்பில் உண்டோ ?

**அமைச்சர் :—**

விளக்கமுடன் கேளப்பா ... ...

**சரத்குமாரன் :—**

... ... ... ... தோளின் மீது
சாருகின்ற வில்லெழுதிப் பொறிப்பதுண்டோ ?
தமிழ்வேந்தர்க் கடையாளம் வேறும் உண்டோ?

**அமைச்சர் :—**

யாருனக்குச் சொன்னார்கள் ? ... ... ... ...

**சரத்குமாரன் :—**

…… …… …… யாரேனும்சில்
யாண்டுகட்கு முன்காணு மற்போ ஞரோ? (222)

**அமைச்சர் :—**

உண்டிருப தாண்டிற்கு முன்னர் எங்கள்
ஒப்பற்ற இளவரசர் மறைந்து போனுர்

**சரத்குமாரன் :—**

கண்டுபிடித் தழைத்துவந்தால் ……?

**அமைச்சர் :—** [சிந்தனையோடு]

…… …… வரலாம்; எங்கே
கண்டாய்சொல்?

**சரத்குமாரன் :—**

…… …… காணவில்லை. இனிமேல்தானே
கண்டுபிடிப் பதற்காகக் கேட்டேன், நாளைக்
காவலன்பால் எனையழைத்துச் செல்லும் இந்தத்
தொண்டினிலே ஈடுபட அவர்விருப்பம்
துணிந்தறிய வேண்டுமெனக் கருதுகின்றேன் (223)

**அமைச்சர் :—**

நாளைவா அரண்மனைக்கு வருதற் கிந்த
நற்சான்றை வைத்துக்கொள் ……

**சரத்குமாரன் :—** [ஓலை நறுக்கைப் பெற்றுக்கொண்டு]

வணக்கம் நன்றி

[அமைச்சர் போகிருர்—தன் திட்டம் எளிதாக நிறைவேறுவதாகக்கருதி மகிழ்ச்சியில் தானே பேசுகிருன் சரத்குமாரன்]

மூளையிருந் தாலெதுதான் முடியா திங்கே
முயலுகின்றேன்—பரிசாக ஆதி மந்தி
தோளுடனே நாட்டிலொரு பகுதி…இன்றேல்
தொலைத்திடுவேன் இருவரையும் ……

[என்று பேசிக்கொண்டே தன்னை மறந்தவனுய் எதிரே வரும் படைத்தலைவன்மேல் மோத அவன் வெகுண்டு]

**படைத்தலைவன் :—**

…… …… யார்நீ? நல்ல
வேளையின்றுன் உயிர்பிழைத்தாய், எந்த ஊர்நீ?
விரைவாகச் சொல்? அந்தக் கையில் என்ன? (224)

**சரத்குமாரன் :—** [நடுக்கத்துடன்]

ஓலை …… …… ……

**படைத்தலைவன் :—** [அதைப்பறித்து]

…… என்னஓலையது பார்ப்போம் ஓஓ
"உடன்இவரை என்னிடத்தில் கொணர்க" என்ன
வேலையுனக் கரண்மனையில் ? …… ……

**சரத்குமாரன் :—** [அச்சத்தோடு]

…… …… …… வேந்தன்பக்கம்

**படைத்தலைவன் :—**

விளம்புக யான்படைத்தலைவன்! அறிவேன் யாவும்

**சரத்குமாரன் :—**

மேலைநாள் காணமற்போன உங்கள்
விருப்பமிகு இளவரசர் …… ……

**படைத்தலைவன் :—** [பரபரப்புடன்]

…… …… …… எங்கே

**சரத்குமாரன் :—**

…… …… …… நாளைக்
காலையிலே …… …… ……

**படைத்தலைவன் :—**

…… …… …… இப்பொழுதே

**சரத்குமாரன் :—**

…… …… சொல்ல மாட்டேன்

**படைத்தலைவன் :—**

கழுத்தினிலே தலையிருக்க வேண்டு மென்றால் (225)

**சரத்குமாரன் :—**

சொல்லுகிறேன், காவிரிப்பூம் பட்டி னத்தில்
தொல்லைபல உற்றவரைத் தேடிக் கண்டேன்
நல்லதொரு பரிசளித்தால் ……

**படைத்தலைவன் :—**

…… …… நல்குவோம் யாம்
நாடுகின்ற பரிசென்ன? நீவி ரும்பும்
எல்லாமிங் களிக்கின்றோம் இளங்கோ வேந்தர்
எங்குள்ளார் அடையாளம் யாவை யும்சொல் ?

**சரத்குமாரன் :—**

வில்லினதாம் அடையாளம் வலது தோளில்
விளங்குவதை என்கண்ணால் நேரிற்கண்டேன் (226)

**படைத்தலைவன் :—**

அப்படியா? எவ்விடத்தில் எவ்வா றுள்ளார்?

**சரத்குமாரன் :—**

அருங்கலைகள் பயின்றாடும் கூத்த னாக......

**படைத்தலைவன் :—** இப்படிவா! [தனக்குள்ளேயே]

...இருவேந்தர் இவ்வோர் நாட்டை
எவ்வகையில் ஆட்சிசெய இயலும்... நண்பா!

(ஒருமுடிவுக்கு வந்தவனாய்)

செப்பியஉன் விருப்பம்போல் பரிசு கோடி
சிறப்பாக அளிக்கின்றேன் ஆனால் நீபோய்

[சரத்குமாரன் காதோடு இரகசியமாகப் பேசுகிறான்]

**சரத்குமாரன் :—**

ஆ !! அப்படியே செய்கின்றேன் ......

**படைத்தலைவன் :—**

...... ......... ...... இன்றேல்
ஆவியுன துடலைவிட்டுப் போகும் ......

**சரத்குமாரன் :—**

...... ...... ...... ஆணை (227)

இருபத்தோராங் காட்சி முடிவு.

## காட்சி 22.

நடிகர் : **கரிகாலன்,** இடம் : **மண்டபம்**
**இரும்பிடர்த்தலையார்.** காலம் : **முன்னிரவு**

**கரிகாலன் :—**

குடநாட்டாற் கனுப்பிவைத்த தூது பற்றிக்
குறிப்பிட்ட நிகழ்ச்சியொன்றும் இல்லையே ஏன் ?

**இரும்பிடர்த்தலையார் :—**

விடமாட்டாய்ப் போரை யின்னும் ? .....

**கரிகாலன் :—**

[சிரித்துக்கொண்டே]

...... ...... ...... வேறுவேலை ?

**இரும்பிடர்த்தலையார் :—**

வேந்தருக்குப் போரையன்றி வினையே இன்றோ ?
நடமாடும் உயிர்களுக்கும் நாட்டி னுக்கும்
நலந்தருபல் செயலிலையோ? உன்றன் வீரம்
வடநாட்டுப் பனிமலையில் விளங்கல் போல
வளர்புகழ்இத் தென்னகத்தில் வாழ்தல் வேண்டும் (228)

தொழில்வளத்தைத் துறைதோறும் வளர்த்தல், தூய்மை
துலங்கநறுங் கல்விநிலை யம்பெருக்கல்
பொழுதறிவோ டியங்கவியன் கலைவளர்த்தல்
பூஞ்சோலை அமைத்தல்தெரு செவ்வையாக்கல்
உழுவோர்க்கிங் குதவுதல்நன் னீரை நல்கும்
ஒப்பற்ற காவிரிநீர் துளியும் வீணே
வழுவாமல் தேக்கியணை கட்டி நாளும்
வயல்வளத்தைப் பெருக்குதல்நல் வாழ்வைப் போற்றல் (229)

எத்துணையோ கடமைகளிங் கிருக்க நீயேன்
இளைத்துமனம் நோகின்ருய் ? ... ...

**கரிகாலன் :—**

... ... ... ... ஆமாம், மாமா
சத்தான செயல்புரிந்தித் தமிழகத்தைத்
தாழாமல் வாழவகை செய்தல் வேண்டும்
முத்தான நறுங்கருத்தைச் சமயம் நோக்கி
மொழிந்தறிவு கொளுத்திளனை முதல்வனுக்க
இத்தரையில் தோன்றியதோர் தெய்வந் தாங்கள்
இருந்தாலும்—'ஆதி'யைஎன் உளம்நினைத்தால் (230)

செயல்மறந்து சிந்தைதடு மாறுகின்றேன்
சேரருடன் போருடற்றும் விருப்பம் இந்த
இயல்பாலே எழுந்ததுதான், ஏதேனும் ஓர்
இடைநிகழ்ச்சி இருந்தால்சற் றமைதி கூடும்

**இரும்பிடர்த்தலையார் :—**

அயலேபோய் அமைதியினைத் தேடல் கூர்த்த
அறிவுடையார் செயலாகா திருப்பினும் நாம்
புயலோனுக் கிவ்வாண்டு விழாவெடுத்துப்
புதுமுறையில் அதையியற்றி மகிழ்ச்சி கொள்வோம் (231)

**கரிகாலன் :—**

காவிரியின் கரைஉயர்ந்த போதே நல்ல
கடிவிழவொன் றியதற்கே எண்ணினேன் யான்

**இரும்பிடர்த்தலையார் :—**

பூவுலக மன்னர், அவர் மறவர் தங்கள்
பொற்கரத்தால் எழுப்பியதால் பொலிவு பெற்றுத்
தாவிவரும் பொன்னிநல்லாள் உள முவப்பத்
தக்கதொரு நீர்விழவைச் செய்தல் வேண்டும்

**கரிகாலன் :—**

யாவருமே வியக்கும்வகை அணையைக் கட்டி
யாப்பதைப்பின் தொடர்ந்துசெய எண்ணுகின்றேன் (232)

**இரும்பிடர்த்தலையார் :—**

அருந்திறலோய்! உனதெண்ணப் படியே ஆக !
ஆடிவெள்ளப் பெருக்கினிலே விழாவைச் செய்ய

**கரிகாலன் :—**

விருந்தினர்க்கும் உறவினர்க்கும் கலைஞர் கட்கும்
விரைவாக அறிவிக்கச் செய்கின் றேன்பின் ?

**இரும்பிடர்த்தலையார் :—**

பொருந்துமந்த விழாவினிலுன் உளம்பூ ரிக்கும்
புதுமைசில நிகழுமென எண்ணு கின்றேன்

**கரிகாலன் :—**

மருந்தாலே தீர்க்கவொணுத் துன்பம் ……

**இரும்பிடர்த்தலையார் :—**

… … … … … … கால
மாற்றத்தால் மறைந்துவிடும்; வருகிறேன் யான் (233)

[புலவர் சென்றபின் புரவலன் ஆதியை எண்ணி வருந்துகிருன்]

**கரிகாலன் :—**

அறிவால்நல் லருளுரையால் ஆட்சிக் கேற்ற
அமைப்புரைக்கும் திறத்தால்உள் ஆழ்ந்த கல்விச்
செறிவால்சொற் சிறப்பதனுல் தேர்ந்த சூழ்ச்சிச்
சிந்தையினுல் மிகப்பெரியார் மாமா … வாழ்வின்
நெறியாலும் சிறந்தவர்தான் … ஆனுல் … காதல்
நெஞ்சையவர் புரிந்துகொளல் இயலா; நெஞ்சின்
வெறியாலே விளைவதுதான் காதல் என்னும்
வீணர்களின் வெற்றுரையும் அவர்பாலில்லை (234)

காதலெனும் நறுங்கனியைக் கையால் தொட்டோ
கண்ணுற்கண் டோ,கருத்தால் உன்னிப் பார்த்தோ
ஏதிலர்போல் இலக்கியத்துள் படித்தோ, ஆன்ற
இன்பமுதிர் அதன்சுவையை அறிதல் ஆமோ?
காதலினுற் கடவுளையும் பெற்ருர் முன்னோர்!
காவலன்என் ருல்யானும் மனிதன் தானே !
ஆதியின்பால் சென்றஉளத் தாழம் நோக்கா(து)
அம்மான்என் பால்ஏதே தோசொல் கின்ருர் (235)

பொன்னிக்குக் கரையெடுத்தேன்—சோழ நாட்டைப்
பொன்விளையும் பூமியெனச் செய்தேன்—ஆனுல்
கன்னிக்கு வரைவியற்ற வில்லைக் காதற்
காரிகையின் சேய்விளைவைக் காண வில்லை

மன்னர்க்குத் தளைபூட்டி வளவர் ஆட்சி
மன்னகத்தில் பரவவகை செய்தேன்—என்றன்
பன்னிக்குத் தளைகூட்டிப் பக்கம் வைத்துப்
பாவையவள் புகழ்பரவச் செய்ய வில்லை (236)

[அப்பொழுது இரும்பிடர்த்தலையார் மீண்டும் வந்து]

**இரும்பிடர்த்தலையார் :—**

மீண்டுமிவ்வா றேங்குவது நலமா நீசொல்?
மெலியாதே காவிரிநீர் விளையாட் டிற்கு
நீண்டதொரு காலமிலை—பிறைநாள் தொட்டு
நிறைமதி நாட்குள்ளேஈ ருறு நாட்குள்
வேண்டுமொரு நாளில்நாம் தொடங்க வேண்டும்
விழாவில்நம் ஆட்டனத்தி ஆடல் வேண்டும்

**கரிகாலன் :—**

தாண்டவத்தில் வேந்தனவன்! இலையா மாமா?

**இரும்பிடர்த்தலையார் :—**

தமிழகத்தில் நீவேந்தன் அவனும் வேந்தன் (237)

[என்று குறிப்பாகச் சொல்லிச் சிரிக்கிறர். ஏதும் விளங்காத கரிகாலனும் பொதுவாகச் சிரிக்கிருன்—இருவரும் செல்கின்றனர்]

இருபத்திரண்டாம் காட்சி முடிவு.

## காட்சி 23.

நடிகர் : **ஆதிமந்தி** இடம் : **சோலை**
**சரத்குமாரன்**
**இசைமுகிலோன்**
**மருதி** காலம் : **பிற்பகல்**

[ஆட்டனத்தி சென்ற இடம் தெரியாமல் பிரிவாற்ருமையாற் குழம்பிய ஆதிமந்தி கழிபடர் கிளவியாகத் தனியே பேசி வருந்துகிருள்]

**ஆதிமந்தி :—**

உள்ளமெலாம் அருள்நிறைந்த உரவோய்! என்றன்
உள்ளிருந்து நடமாடும் உயிரே! வாழ்விற்
கள்ளமிலாப் பெருங்குணத்துக் காதல் மன்ன!
காவியத்துங் காணவொணுத் தலைவா! துன்ப
வெள்ளமெனை விழுங்கும்போ தெங்கே சென்ருய்?
வீரா!நீ ஏனைமீட்க வரமாட் டாயா?
புள்ளினமே! அவர்புகுந்த இடத்தை என்பாற்
புகன்றிரங்கி உயிர்காக்க மாட்டிரா? ஓ! (238)